# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண். 85/2022**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ம் நாள் திங்கட்கிழமை PW1–இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.09.2023 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | குமார் (PW–1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

என் பெயரிலும் என்சகோதரர் பெயரில் கூட்டு பட்டாவின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குச்சொத்தில் உள்ள வீட்டிற்கு செலுத்தியுள்ள வீட்டு வரி ரசீதின் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13.03.2021 தேதியிட்ட வழக்கறிஞர அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கு அஞ்சல் ஒப்புதல் அட்டை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10,04,2021 தேதியிட்ட பிரதிவாதியின் பதில் அறிவிப்பின் சார்வு நகல் தாக்கல் செய்கிறேன், அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**